பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
15 12 2025 **MONDAY** 6 45 **AM**

வணக்கம் - மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர், தமிழ்க் கலாச்சாரத்தின் மகத்தான பாதுகாவலராக திகழ்ந்தவர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாடுமுழுவதும், ரயில்வே மின்மயமாக்கல் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதாக ரயில்வே தெரிவித்துள்ளது.
3. மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களால் பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
4. சென்னைக்கு குடிநீர் வழங்கும் சோழவரம் ஏரி, பாதுகாப்பாக உள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.
5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>>><<<<<<

பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர், தமிழ்க் கலாச்சாரத்தின் மகத்தான பாதுகாவலராக திகழ்ந்தவர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பெரும்பிடுகு முத்தரையரை கௌரவிக்கும் வகையிலான சிறப்பு அஞ்சல்தலையை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டது மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

ஆற்றல் மிக்க நிர்வாகியான அவருக்கு, போற்றத்தக்க தொலைநோக்குப் பார்வையும், எதையும் முன்கூட்டியே உணரும் திறனும், போர்த் தந்திர ஞானமும் பெற்றவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பிடுகு முத்தரையரின் அசாதாரண வாழ்க்கையைப் பற்றி இளைஞர்கள் படித்து அறிந்துகொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும், ரயில்வே மின்மயமாக்கல் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டில் உள்ள அகல ரயில் பாதையில் 99 சதவீதத்திற்கும் அதிகமான தொலைவுக்கு மின்மயமாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை 25 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களுக்கு உட்பட்ட 33 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்கான ரயில் பாதை மின்மயமாக்கப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ரயில் பாதைகள் தூய்மையான மற்றும் மேம்பட்ட வகையில் விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களால் பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களை திமுகவினர் மக்களிடம் எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டங்கள் மூலம், 12 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 2 கோடியே 53 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு, அவர்களது வீடுகளுக்கே சென்று மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு மற்றும் மகளிருக்கான இலவச பேருந்துப் பயண திட்டம் மூலம் ஏராளமானோர் பயன்பெற்று வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சென்னைக்கு குடிநீர் வழங்கும் சோழவரம் ஏரி, பாதுகாப்பாக உள்ளது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, நீர்வளத்துறையின் சென்னை மண்டல முதன்மை பொறியாளர் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில், இந்த ஏரியில் மண் அணை அமைந்துள்ள பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு மற்றும் விரிசல்களை சீரமைக்க 120 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம்

*தயாரிக்கப்பட்டு, முதற்கட்டமாக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த அக்டோபர் மாதம் தொடங்கிய வடகிழக்கு பருவமழையின் போது, கரையின் மீது அமைக்கப்பட்ட தார் சாலையில் ஏற்பட்ட விரிசலுக்கு அணையின் அடித்தளத்தில் அமைந்துள்ள மண் அமைப்பு மற்றும் மிகுதியான நிலத்தடி நீரோட்டமே காரணம் என்று தெரியவந்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.*

*இந்த விரிசல் மற்றும் மண் அரிப்புகள் ஒப்பந்ததாரின் சொந்த செலவில் சீரமைக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

*கேரள உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி பெற்றுள்ள வெற்றி, அம்மாநிலத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.*

*நாகர்கோவிலில் பிஜேபி சார்பில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த பயிலரங்கில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர். திருவனந்தபுரம் மாநகராட்சியை பிஜேபி கைப்பற்றியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்தார்.*

*திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றும் விவகாரத்தில், தமிழக அரசு இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால், பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டிருக்கும் என்றும் திரு. பொன். ராதாகிருஷ்ணன் கூறினார்.*

>>>>>><<<<<<

*நாமக்கல் ஆஞ்சநேயர் திருக்கோவிலில், ஹனுமன் ஜெயந்தியை முன்னிட்டு வடை மாலை தயாரிக்கும் பணி நேற்று தொடங்கியது.*

*இப்பணியில் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த சமையல் கலைஞர்கள் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கண்ணன் 45 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் இன்றும் நாளையும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.*

*(Voice Byte - Senthamaraikannan - 42 Sec)*

>>>>>><<<<<<

*இருவரிச் செய்திகள்*

*தாய்லாந்தில் குடியிருப்பு பகுதி மீது, கம்போடியா நடத்திய தாக்குதலுக்கு தாய்லாந்து ராணுவம் கண்டனம் தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*சூடானின் ஐ.நா. தளம் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில், பங்களாதேஷைச் சேர்ந்த அமைதி காக்கும் படை வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர்.*

>>>>>><<<<<<

*தில்லி அருண்ஜேட்லி கிரிக்கெட் மைதானத்தில், அர்ஜென்டினா கால்பந்து வீரர் Lionel Messi பங்கேற்கும் நிகழ்ச்சியை முன்னிட்டு, போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.*

>>>>>><<<<<<

*சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற பழைய மாணவர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது.*

*விஜயகுமார்*

*பெங்களூருவிலிருந்து காரில் கடத்தி வரப்பட்ட 150 கிலோ போதைப்பொருட்கள் விழுப்புரத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஒரு பெண் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

>>>>>><<<<<<

*நீலகிரி மாவட்டம், உதகையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி நடைபெற்ற பேரணியை உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கண்டுகளித்தனர்.*

>>>>>><<<<<<

*தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரத்தில் உள்ள ராகு பரிகார தலமான நாகநாத சுவாமி கோவிலில் நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியில் ஏராளமனோர் பங்கேற்று வழிபட்டனர்.*

>>>>>><<<<<<

*கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு மத தலைவர்களும் கலந்து கொண்டு, கேக் வெட்டி கொண்டாடினர்.*

>>>>>><<<<<<

*சென்னை மெரினா நீலக்கொடி கடற்கரை பகுதியில், மாநகராட்சி சார்பில் நேற்று நடைபெற்ற பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.*

>>>>>><<<<<<

*சென்னை மாநகரில் ஒரு லடசத்து 5 ஆயிரத்து 556 செல்லப் பிராணிகள் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 117 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 15 புள்ளி ஐந்து ஓவரில் 3 விக்கெட்ட இழப்பிற்கு 120 ரன் எடுத்து வெற்றி பெற்றது.*

*இதன்மூலம், ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.*

>>>>>><<<<<<

*18 வயதுக்குபட்டோருக்கான ஆரஞ்ச் Bowl Tennis போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் ரேவதி – செர்பியாவின் Anastasija Cvetkovic இணை பட்டம் வென்றது.*

*அமெரிக்காவின் Fort Laurderdale-ல் நேற்று நடைபெற்ற போட்டியில், இந்த இணை ஜமைக்காவின் Alyssa James – அமெரிக்காவின் Annika Penickova இணையை 7-5, 6-1 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தியது.*

>>>>>>END<<<<<<